
Volume-12 Issue-05 November-2025
Price Rs. 25

# அருள் ராஜயோகம்

மலர் –12 இதழ் – 05 நவம்பர்–2025

★ ஆன்மீகம் ★ ஜோதிடம் ★ மருத்துவம் ★ மாதஇதழ்




"ஒரு மனிதனை யார் கைவிட்டாலும்
ஆன்மீகம் கைவிடாது!"

– Dr. K.ராம் Ph.D., (USA)

இம்மாத வெளியீடு

# இப்போது விற்பனையில்..!




ஓர் ஆண்டின் 366 நாட்களுக்குரிய திருத்தலங்களின் ஸ்தல வரலாறுகள், ஸ்தல பரிகார குறிப்புகள், ஸ்தலத்திற்கு உரிய மந்திரங்கள், ஸ்தலத்தின் பூஜைக்குரிய விளக்கங்கள், ஸ்தல அமைவிடம், வழித்தடங்கள் அத்தனையும் தாங்கி அரிய படைப்பாக போற்றி பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷம் இதுவே!

தவற விடாதீர்கள்..!

இன்றே வாங்குங்கள்..!

நமது பதிப்புகள் அனைத்தும் கிடைக்கும் இடங்கள்

*Publishers:*

**APSARA PUBLICATIONS**, # 18/67, P.V.Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014
Phone: 044- 2811 6770 | Cell: 72999 21880 / 88386 38900
E-mail: apsarapublications@gmail.com | www.apsaraepublications.com

**விஜயா பதிப்பகம்**
20, இராஜ வீதி, டவுன் ஹால், கோவை -1. போன்: 0422- 2394614, 2382614, செல்: 90470 87058
மற்றும் அனைத்துக் கிளைகளிலும் கிடைக்கும்

**ஸ்ரீ தயவு சித்தாஸ்ரமம்** திருவண்ணாமலை - 606 603. செல்: 99448 00220

# அருள் ராஜயோகம்

Volume-12 Issue-5 November 2025

மலர் - 12 இதழ் - 5 நவம்பர் 2025

●ஆன்மிகம் ●ஜோதிடம் ●மருத்துவம் ●மாதஇதழ்


அன்புள்ளம் கொண்ட வாசக- வாசகியர்களுக்கு

ஆழமான ஆன்மீகத்தையும் அறியவேண்டிய சாஸ்திரத்தையும் அற்புதமான மனோதிடத்தையும் வாரி வழங்கும் அருள் ராஜ யோகம் என்ற அற்புதமான ஆன்மீக மாத இதழை பார்க்கக்கூடிய படிக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்த பாக்கியவான்களாகிய உங்களுக்கு குலதெய்வ ஆசியும் நவகிரக அனுகிரகமும் முழுமையாக கிடைக்கவும் நாளும் பொழுதும் நன்மைகள் பெருகவும் உண்மையாக பிரார்த்திக்கின்றேன்

கார்த்திகை மாதம் பிறக்கின்றது, சபரிமலை ஸ்ரீ தர்மசாஸ்தா ஸ்ரீ ஐயப்பனின் பக்தர்கள் மாலை அணிந்து 48 நாட்கள் விரதம் இருந்து இருமுடி தாங்கி ஐயப்பனின் அருள் நாடி செல்லும் மாதம். அதை முன்னிட்டு இம்மாத இதழ் ஸ்ரீ ஐயப்பனின் சிறப்பிதழாக மலர்கின்றது. சபரிமலை ஸ்ரீ ஐயப்பனின் அருள் மணக்கும் அலயங்கள் இங்கே உங்களுக்காக மணக்கின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் ஸ்ரீ ஐயப்பனின் மகிமைகள் இடம்பெறுகின்றன.

நெஞ்சிற்கினிய நேயர்களே!

ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது என்ற என்னுடைய ஆழமான ஆன்மிகத்தையும் பதிவு செய்து அகில உலகத்தில் உள்ள அத்தனை தெய்வங்களின் அனுக்கிரகமும் ஈரேழு உலகத்தின் உள்ள எல்லா சக்திகளின் ஒட்டுமொத்த ஆசீர்வாதமும், உங்களுக்கும் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிய பிரார்த்தனையோடும் வாழ்த்துக்களோடும்.






ஆசிரியர்
S R J "ராஜயோகம்"
Dr. K.ராம் Ph.D., (USA)

சுவாமியே சரணம் ஐயப்பா



## சிறப்புக் கட்டுரை:

# கடன் தொல்லை தீர மூன்று வழிகள்!

**உலகெங்கிலும் உள்ள அருள் ராஜயோகம் வாசகர்களுக்கு எனது இனிய நல்வாழ்த்துகள்! நிறைய நிகழ்ச்சிகளில், நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். இருந்தாலும் கூட, வாசகர்களுக்காக, இதுபற்றி கட்டுரை வெளியிடுங்கள் என்று அனைவரும் கேட்பதால் இடம் பெறுகிறது இந்த மாத சிறப்புக் கட்டுரை.**

கடன் தொல்லை ஒரு பொதுவான விஷயம். இதில் இருந்து, விடுபட என்ன செய்வது என்று 3 வழிகளைக் கேட்கிறார்கள்.

கடன் தொல்லையிலிருந்து விடுபடுவதற்கு, மூன்று வழி அப்படிங்கிறதை விட, முந்நூறு வழிகள், மூவாயிரம் வழிகளை, நமக்கு சாஸ்திரம் சொல்லி வைத்திருக்கிறது. ஆனால், அத்தனை வழிகளை, நீங்கள் கடைப்பிடிக்க முடியாது, அப்படிங்கிற காரணத்தினாலே, எளிமையான வழிமுறைகளை, கட்டுஸ்ரையில் சொல்லி இருக்கிறோம்.

**இந்த மூன்று வழி என்ன என்று என்னைக் கேட்டதினால் சொல்கிறேன்.**

முதல் வழி கடன் வாங்காமல் இருப்பது நல்லது. இருந்தாலும், அதை எவருத் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் இந்தக் காலத்தைப் பொறுத்தவரை கடன் வாங்க வேண்டிய நிர்பந்தம், நிறைய பேருக்கு இருந்து கொண்டு இருக்கிறது என்பது, எதார்த்தம்.

அதனால, வாங்கிய கடன் தொலைந்து, நிவர்த்தி ஆவதற்கு, நீங்க என்ன செய்கிறீர்கள் என்றால், சனிக்கிழமை நாட்களில் இதனைச் செய்ய வேண்டும். அதாவது இப்பொழுது, ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபாய் கடன் வாங்குகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த ஒரு லட்சத்தை முழுமையாக நாம், சம்பாதித்துக் கொடுக்க முடியாத, ஒரு சூழலில் இருந்து கொண்டு இருக்கிறோம் என்றால்,



அப்பொழுது ஒரு ஐயாயிரம், பத்தாயிரமாவது கொடுக்கலாம், இல்லையா?

அல்லது, ஒரு ஆயிரமாவது தருவதானாலும், சனிக்கிழமை நாட்களில், மாலை நேரத்தில், ஆறு மணிக்கு மேல, இந்த வேப்பந்தழைன்னு சொல்லுவாங்க. வேப்ப இலைன்னும் சொல்லு வாங்க. அது, முத்தின இலையா, இருந்தாலும் சரி, கொழுந்தாக இருந்தாலும், சரி. யாருக்கு பணம் கொடுக்கப் போகிறீர்களோ, அந்த கடனை செலுத்தப் போகிறீர்களோ, அந்த தொகையில், ஒரு சிறு தொகை, அதில் ஒரு ஆயிரம் ரூபாய் மட்டும், எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்.

உதாரணமாக ஒரு லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டிய, தொகையில், ஒரு ஆயிரம் மட்டுமாவது, சனிக்கிழமை மாலை நேரத்தில் எடுத்து வைத்து, அதை ஒரு இரும்புப் பெட்டியில வைத்து, அந்த இரும்புப் பெட்டிக்குள்ள, கொஞ்சம் வேப்பிலை போட்டு வைத்து விடுங்கள். அந்த வேப்பிலையோடு சேர்த்துக் கூடவே எட்டிக்காய்ன்னு சொல்லு வார்கள். அந்த எட்டிக்காயைப் போட்டு வைக்கலாம்.

இந்த எட்டிக்காயும் போட்டு வைத்துவிட்டு, அதன் பிறகு, கொஞ்சமாக உப்பு, அதாவது, கல் உப்பு என்று சொல்லக்கூடிய உப்பை கொஞ்சமாக அந்தப் பெட்டிக்குள் போட்டு வைத்துவிட்டு, அந்தப் பெட்டியை மூடி, உங்களுடைய பூஜை அறையில் வைத்து, சாமி கும்பிட்டுக் கொள்ளுங்கள்.

இந்த கடன் வந்து, எந்த நேரத்தில் வாங்கினோமோ, திருப்பி செலுத்த முடியாத, ஒரு சூழல் இருந்து கொண்டு இருக்கிறது. இந்தக் கடனுக்கு, நான் சம்பாதித்துத் தருகிறேன், என்பதை விட, எனக்கு திடீர்ன்னு வருமானம் வந்து, அதாவது, சம்பாதிக்கிறதுக்கு மேல, எனக்கு வந்து, உபரியாக வருமானம் வந்து, இந்த கடனை நான் சீக்கிரமே கொடுத்து முடித்து விடவேண்டும்.

நான் சொன்ன வாக்கை, நான் காப்பாற்ற வேண்டும், என்கிற விஷயத்தை நினைத்து, எந்த தெய்வமாக இருந்தாலும், வழிபாடு வைத்துக் கொள்ளுங்கள். வழிபாடு வைக்கும் பொழுது, முக்கியமாக நவக்கிரகங்களை நினைத்துக் கொள்ளுங்கள். குலதெய்வத்தை நினைத்துக் கொள்ளுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, கால பைரவரை நினைத்துக் கொள்ளுங்கள்.



இந்த இரும்பு பெட்டியை, எந்த இடத்தில் வைத்துக் கும்பிட வேண்டும் என்றால், நிறைய சாமி இருக்க வேண்டும், என்றெல்லாம் கிடையாது. உங்களுடைய பூஜை அறையில் எந்த சாமி இருந்தாலும் சரி, அந்த சாமிக்கு முன்னாடி வைத்துக் கொள்ளுங்கள்.

ஆனால், இந்தப் பெட்டியை, பூஜை அறையில் வைக்கும் பொழுது, பூஜை அறையில, சாமி சம்மந்தப்பட்ட படம் மட்டும் தான், இருக்க வேண்டும்.

தேவையில்லாத, அங்கு எந்திரம் வாங்கினேன், இங்கு இது வாங்கினேன், இங்குஷ் ரட்சை வாங்கினேன், அங்கு கயிறு வாங்கினேன் என்று, கண்டதெல்லாம் இருக்கக் கூடாது.

கடவுள் படம் மட்டும்தான் பூஜை அறையில இருக்க வேண்டும். அந்த கடவுளுடைய படத்துக்கு முன்பு, இந்த இரும்புப் பெட்டிக்குள்ள, இந்த மாதிரியான வேப்பந்தழையைப் போட்டு வைத்து, கல் உப்பு போட்டு வைத்து, எட்டிக்காய் போட்டு வைத்து, நீங்கள் நமஸ்காரம் செய்து, ஒரு வேண்டுதல் வைத்துக் கொண்டு, அடுத்த நாள் காலையில் கொண்டு போய், அந்த காசைக் கொடுங்கள். அப்படிக் கொடுத்து ஆரம்பித்தீர்கள் என்றால், கண்டிப்பாக, அந்த கடனுக்கு உண்டான பணம் வந்து, ஏதாவது ஒரு வகையில், திடீர்ன்னு கிடைத்து, இந்த தொந்தரவே வேண்டாம்னு நினைக்கிற அளவுக்கு, வெகு சீக்கிரமே, கடன் தொல்லையிலிருந்து, நிவர்த்தி கிடைக்கக்கூடிய



பாக்கியம், இருந்து கொண்டு இருக்கும்.

இந்த எட்டிக்காய் சொன்னோம் இல்லையா? இந்த எட்டிக்காய், என்ன செய்யும் என்றால், இந்த கடனைக் கொடுத்து விட்டு, உங்களை வந்து, தேவையில்லாமல் பேசினார் இல்லையா?

அதாவது, கடன் கொடுத்தவர் வந்து, கடனைக் கேட்டால் பரவாயில்லை. கடனுக்கு மேல், தேவையில்லாத, தன்னுடைய கௌரவம் பாதிக்கிற மாதிரி, குடும்பத்தில் இருக்கக்கூடிய, பெண்களைப் பாதிக்கிற மாதிரியான, அவலமான சூழ்நிலைகள், நிறைய பேருக்கு ஏற்படுகிறது.

அந்த அவலமான சூழ்நிலையை ஏற்படுத்திய, அந்த மனிதர் முன்பு, நீங்கள் மிகப்பெரிய, கௌரவமாக வாழக்கூடிய, மிகப்பெரிய தகுதியை, இந்த சிறு பரிகாரம் செய்கிறது என்பதுதான் , மிகப்பெரிய அம்சமாக, இருந்து கொண்டு இருக்கிறது.

என்னுடைய வாழ்க்கையில், ஏளனம் பண்ணியவர்கள் எல்லாம், இன்றைக்கு வந்து, நான், மிகப்பெரிய, ஒரு அமைப்பாக, மிகப்பெரிய அதிகாரமாக வாழக்கூடிய தகுதி கூட, இந்த மாதிரியான, சின்ன, சின்ன பரிகாரங்களினால் கிடைத்தது, அப்படிங்கிற விஷயத்தைதான், இந்தக் கட்டுரையில், பூரணமாக, பதிவு பண்ண கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாகவே, கஷ்டப்படுபவர்கள், கடவுளை நம்புகிறார்களோ, இல்லையோ, ஜோதிடத்தை நம்புகிறார்கள்.

அந்த மாதிரி உள்ளவர்களிடம் வந்து, அனுமானம் இல்லாத, மந்திரத்தை சொல்வது, தேவையில்லாமல், பொழுதுபோக்காக, கதை சொல்வது, என்கிற மாதிரி இல்லாமல், உண்மையாகவே, உங்களுடைய வாழ்க்கையில், நன்மை பயக்கக்கூடிய, மிகப்பெரிய அமைப்பு அமைப்புகளைத்தான், உங்களுக்கு தொடர்ந்து, கொடுத்துக் கொண்டு இருக்கிறேன்.

இதே மாதிரி, நிறைய விஷயங்களை, நிறைய உள்ளார்ந்த விஷயங்களை, என்னுடைய

**நான் சொல்லக்கூடியது, இந்த விஷயத்தை செய்து பார். இந்த சாமியை கும்பிட்டுப் பாருன்னு கிடையாது. இந்த விஷயத்தை செய்தாலோ, இந்த சாமியைக் கும்பிட்டாலோ, நிச்சயமாக, நீங்க நல்லா இருக்க முடியுங்கிற விஷயத்தை, மிகப்பெரிய ஆராய்ச்சியோடு, அதை அனுபவித்துத்தான், உங்களுக்கு சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.**

வாழ்க்கையில், சொல்ல முடியாது பட்ட, கஷ்டங்களை எல்லாம் , நமது ராஜயோகம் YOU-TUBE TV யில் மிகப்பெரிய விஷயங்களை, தெரிந்து கொள்ள முடியும்.

நான் சொல்லக்கூடியது, இந்த விஷயத்தை செய்து பார். இந்த சாமியை கும்பிட்டுப் பாருன்னு கிடையாது. இந்த விஷயத்தை செய்தாலோ, இந்த சாமியைக் கும்பிட்டாலோ, நிச்சயமாக, நீங்க நல்லா இருக்க முடியுங்கிற விஷயத்தை, மிகப்பெரிய ஆராய்ச்சியோடு, அதை அனுபவித்துத்தான், உங்களுக்கு சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

கண்டிப்பாக. இந்த உலகத்துல, கெட்டவங்க எல்லாம், எப்படியோ பிழைத்துக் கொள்கிறார்கள். நல்லவர்கள்தான், கஷ்டப்படுகிறார்கள் என்கிற விஷயத்தை, நடுநிலையோடு உணர்ந்ததினால்தான், மிகப்பெரிய, நியாயமான விஷயங்களை, இந்தக் கட்டுரையில், பகிர்ந்து கொள்கிறேன்.

எது, எப்படி இருந்தாலும், ஒரு மனிதரை, யார் கைவிட்டாலும், ஆன்மீகம் கைவிடாது என்கிற என்னுடைய ஆழமான ஆன்மீகத்தை பதிவு செய்து, அகில உலகத்தில் உள்ள, அத்தனை தெய்வங்களின் அனுகிரகமும், ஈரேழு உலகத்தில் உள்ள, எல்லா சக்திகளின் ஒட்டுமொத்த ஆசீர்வாதங்களும், உலக மக்கள் அனைவருக்குமே கிடைக்க வேண்டிய, பிரார்த்தனையோடும், வாழ்த்துக்களோடும்,

**S R J "ராஜயோகம்"**

**Dr. K.ராம் Ph.D., (USA)**

உ

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

**நீங்கள் எந்த தேதியில், ராசியில், நட்ஷத்திரத்தில், லக்கினத்தில் பிறந்தவராக இருந்தாலும்... ஏன்?**
**எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும்**

'நல்ல நேரமும்' நன்மையான காலமும்'ஜாதகத்தில் இருப்பது சத்தியமான உண்மை

உங்களுடைய ''ஜாதகம்'' ''கைரேகை'' ''பிறந்ததேதியை'' ஆய்வு செய்து பிரபஞ்சத்தில் உங்களுக்காக விதிக்கப்பட்டுள்ள ''யோக பலன்களையும்'' ''பாவ புண்ணியங்களையும்'' ''பரிகார நன்மைகளையும்'' உறுதியாக தெரிந்துகொண்டு ''எண்கணித சாஸ்திரம்'' ''வாஸ்து சாஸ்திரம்'' ''தெய்வ பிரசன்ன சாஸ்திரம்'' ''விருட்ஷ சாஸ்திரம்'' ''மச்ச சாஸ்திரம்'' ''மந்த்ர'' ''தந்த்ர' சாஸ்திரம் ''சாமுத்ரிகா சாஸ்திரம்'' ''பஞ்சபூத சாஸ்திரம்'' ''பரிகார சாஸ்திரம்'' ''அதிர்ஷ்டரத்தின சாஸ்திரம்'' மற்றும் ''அஸ்ட்ரோ பயோரித சாஸ்திர'' விதிகளின்படி

## ''திக்கற்ற யாவரும்'' ''ஒப்பற்ற பயன்பற''

## SRJ "ராஜயோகம்" Dr. K.ராம் Ph.D., (USA)

''அண்ட நிழலும் இல்லை'' ''ஆதரிப்பார் யாரும் இல்லை''
என்ற நிலையில் ஏக்கப்பட்டுக் கொண்டிருக்கும், மனித உள்ளங்களை ஊக்கப்படுத்தி உண்மையான வாழ்வியலில்
''அவமானப்பட்ட'' ஒவ்வொரு மனிதனுக்கும் வெகுமானம் உண்டு!
என்ற ஆன்மீக உண்மையை மதங்களைக் கடந்து உலக நாடுகளில் உறுதிப்படுத்தி,
''சர்வமத ஜோதிட மகிரிஷி'' என்று பாராட்டும் பெற்றதோடு,
சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா உட்பட ஆஸ்திரேலியாவில் ''சிட்னி முருகர் கோவில்'' மற்றும் ''ஏடிபிசி வானொலி''-யில் சிறப்பு ஆன்மீக நேரலை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மன், சுவிட்சர்லாந்து, கனடா, இங்கிலாந்து (லண்டன்) உட்பட மேலை நாடுகளில் உள்ள நோய்களின் இக்கட்டான கேள்விகளுக்கு, அப்பட்டமான ஆன்மீக விளக்கங்கள் கொடுத்து, வெளிநாட்டு மக்களாலும், பத்திரிகைகளாலும், பாராட்டுப் பெற்றதோடு, ஜோதிடம், ஆன்மீகம் உள்ளிட்ட துறைகளில் சிறந்த சேவைக்காக ''மனிதருள் மாணிக்கம்'' ''மகாத்மா காந்தி'' ''சாதனைச் சிகரம்'' ஆகிய விருதுகளும் பாராட்டுக்களும் பெற்றதோடு ''சாணத்திற்கும்'' ''மெஞ்ஞானத்திற்கும்'' உள்ள தாத்பர்யங்களை ''விஞ்ஞானத்தோடு'' விளக்கப்படுத்தி, ஆளுநர் அவர்களால் ''ஆன்மீகச் செம்மல்'' விருது பெற்ற



## SRJ "ராஜயோகம்"

## Dr. K.ராம் Ph.D., (USA)

**அவர்களை நேரில் சந்திக்க முன்பதிவிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :**

SRJ "ராஜயோகம்" Dr.K.Ram Ph.D (USA)

S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

NO: 139, PANNA PLAZA, ARCOT ROAD, KODAMBAKKAM, CHENNAI - 600 024, TAMIL NADU, INDIA.

OFFICE : 044 - 24849187
MOBILE :
9940431377, 9677276129,
9952991118, 9840160068
EMAIL : srjgem@gmail.com
WEB : www.srjgemsastronumero.com, www.drkramsrj.com.

SINGAPORE / MALAYSIA :
No: 250, BRICK FIELDS,
LITTLE INDIA ,
KUALA LUMPUR - 50470.
MOBILE : +91 9952991118

SRILANKA :
NO: 81, 1/5 MAHA,
VIDIYALAYA MAWATHA,
COLOMBO - 13.
OFFICE : +94112448303
MOBILE : +94772254163
+91 9952991118

AUSTRALIA :
NO: 65, HOMEBUSH ROAD,
STRATHFIELD SYDNEY,
AUSTRALIA - 2135.
MOBILE : +91 9952991118

LONDON :
NO: 163, STAINES ROAD,
MIDDLE SEX TWS 3JZ,
UNITED KINGDOM.
MOBILE : +91 9952991118

**சுவாமி ஐயப்பனின் வளர்ப்புத் தந்தை மன்னர் ராஜசேகரன் திருவிதாங்கூர் அரச வம்சத்தை சேர்ந்தவராவார். அவரது ஆட்சிக்காலம் அந்த நாட்டின் பொற்காலமாக இருந்தது என்ற மனக்குறை இருந்தது. அவருக்கு குழந்தை இல்லை. ஒரு குழந்தைக்காக சிவபெருமானிடம் இடைவிடாமல் வேண்டினார்.**

அதேநேரம் மகிஷாசூரன் எனும் அசுரனை பூமியில் யாராலும் அழிக்க முடியாது என்கிற வரம் அளிக்க வேண்டிய கட்டாயம் பிரம்மதேவனுக்கு ஏற்பட்டது. பிரம்மன் கொடுத்த வரத்தால் தன்னை எவரும் கொல்ல முடியாது என்பதால் அனைவரையும் அழிக்கத் தொடங்கினான். ஒரு தெய்வீக சக்தியால் மட்டுமே அவனை அழிக்க முடியும் என்பதை உணர்ந்த தேவர்கள் துர்காதேவியை தஞ்சமடைந்தனர். துர்க்கை அம்மன் அவனை ஒரு போரில் கொன்றார்.

தனது சகோதரனைக் கொன்றவர்களை பழிவாங்க உறுதி பூண்ட மகிஷாசுரனின் சகோதரி மகிஷி பிரம்மனை நோக்கி கடுந்தவம் புரிந்து மகா விஷ்ணுவுக்கும் (ஹரி) மற்றும் சிவபெருமானுக்கும்

# அருள் தரும் குருநாதன்!



(ஹரன்) பிறக்கும் குழந்தையால் மட்டுமே தன்னை கொல்ல முடியும் என்கிற ஒரு வரத்தைப் பெற்றுக் கொண்டாள். அதன் பிறகு தேவலோகத்திற்கு சென்ற மகிஷி தேவர்களைத் துன்புறுத்த தொடங்கினாள். ஹரிஹரனுக்கு பிறக்கும் மகனைத் தவிர வேறு யாராலும் மகிஷியை கொல்ல முடியாது என்கிற வரத்தை அவள் பெற்றிருப்பதால் மகாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுத்தார். விஷ்ணுவின் பெண் வடிவமான மோகினிக்கும் சிவபெருமானுக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்து அதை சிவபக்தனான குழந்தையில்லாத பந்தளராஜன் ராஜசேகரனின் பராமரிப்பில் விடுவது என்று முடிவு செய்யப்பட்டது.




அதன்படி ஒருநாள் பம்பை நதிக்கரையில் உள்ள காடுகளில் வேட்டையாட பயணம் மேற்கொண்ட மன்னன் ராஜசேகரன் ஆற்றங்கரையின் இயற்கை அழகு கொஞ்சும் சுற்றுப்புறம் மற்றும் நீர்வீழ்ச்சியின் அழகை கண்டு ரசித்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது காட்டிலிருந்து ஒரு குழந்தையின் அழுகுரலைக் கேட்டார்.



குழப்பத்துடன் அங்கே நின்ற மன்னன் குழந்தைக்கு சொந்தமானவர்கள் யாரும் சுற்றிலும் இல்லாததால் இந்த குழந்தையை தனது அரண்மனைக்கு எடுத்துச் சென்று வளர்க்க வேண்டும் என்று மனதில் ஏக்கம் கொண்டார். எங்கிருந்தோ ஒரு முனிவர் தோன்றி ‘குழந்தையை உனது அரண்மனைக்கு எடுத்துச் சென்று வளர்த்துக்கொள்’ என்று அறிவுறுத்தினார்.

மேலும் அந்தத் துறவி இந்த குழந்தை உனது அரச வம்சத்தின் எல்லாத் துன்பங்களையும் நீக்குவான் என்றும் சிறுவனுக்கு 12வயதாகும்போது மன்னர் ராஜ சேகரனுக்கு அந்தக் குழந்தையின் தெய்வீகத்தன்மையை அறிந்து கொள்ள முடியும் என்றும் உறுதியளித்தார்.

குழந்தை கழுத்தில் மணி கிடந்ததால், குழந்தைக்கு 'மணிகண்டன்' என்று பெயர் சூட்டும்படி அந்த சாது அறிவுறுத்தினார்.

குழந்தையின் வரவில் பந்தள நாடே மகிழ்ச்சியில் மூழ்கி இருந்தபோது மன்னர் ராஜசேகரனின் காலத்திற்குப் பிறகு நானே இந்த நாட்டிற்கு



சக்தியைப் பற்றி யாரிடமும் சொல்லிக் கொள்ள வேண்டாம் என்று வேண்டிக் கொண்ட மணிகண்டன் அரண்மனைக்குத் திரும்பினார்.

அதே நேரத்தில் இத்தனை வருடங்களாக குழந்தை இல்லாமல் இருந்த மகாராணிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு ராஜராஜன் என்று பெயரிட்டனர். இப்படிப்பட்ட அதிசய நிகழ்வுகளுக்கு ஏதோ ஒரு வகையில் மணிகண்டனுக்கு தொடர்புள்ளதை உணர்ந்த ராஜசேகரன் மணிகண்டனுக்கு மன்னராக முடிசூட்ட முடிவு செய்தார். ஏனென்றால் அவர் வெளிப்படையாகவே ஐயப்பனை தனது மூத்த மகனாகக் கருதினார்.

மன்னருடைய அமைச்சரை தவிர மற்ற எல்லோரும் இதனால் மனம் மகிழ்ந்தனர். அரசனாக வேண்டும் என்கிற அபிலாஷையை மனதுக்குள் ரகசியமாக வளர்த்து வந்த தந்திரக்காரனான மந்திரி, தெய்வீக அவதாரமான மணிகண்டனை அழிக்க பல முயற்சிகள் செய்தான்.


தனது திட்டங்கள் தோல்வியடைந்ததால் அமைச்சர் மகாராணியிடம் சென்று தன் சொந்த மகன் உயிருடன் இருக்கும்போது மன்னர் ராஜசேகரன் தனக்குப் பிறகு மணிகண்டனுக்கு முடி

மன்னராக வேண்டும் என்று கனவு கோட்டை கட்டியிருந்த அரசவை திவான் மட்டும் அரச தம்பதியரின் மகிழ்ச்சியால் கொதிப்படைந்தான்.

குழந்தையிலிருந்தே மணிகண்டன் மிகவும் புத்திசாலியாகவும் மதிநுட்பத்துடனும் இருந்தான். தற்காப்புக் கலைகள் மற்றும் சாஸ்திரங்களில் சிறந்து விளங்கிய மணிகண்டன் தனது புத்திசாலித்தனம் மற்றும் தெய்வீக ஆற்றலால் தனது குருவை ஆச்சரியப்படுத்தினான். பந்தள நாட்டில் அமைதியும் செல்வமும் நிரம்பி வழிந்தது. காலப்போக்கில் குரு, மணிகண்டன் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல தெய்வீக அவதாரம் என்கிற முடிவுக்கு வந்தார்.

படிப்பை முடித்தவுடன் மணிகண்டன் தனது குருவுக்கு குருதட்சனை வழங்கவும் அவருடைய ஆசியைப் பெறவும் சென்றார். மணிகண்டன் தனது ஆன்மீக குருவிடம் ஆசீர்வாதம் வாங்குவதற்காக அணுகியபோது குரு மணிகண்டனை பற்றி தான் ஏற்கனவே ஊகித்தவாறு, மணிகண்டன் ஒரு மனிதப்பிறவி அல்ல மனிதகுல நன்மைக்காக படைக்கப்பட்ட தெய்வீக சக்தி என்பதை விளக்கினார்.

மேலும் குரு மணிகண்டனிடம் பிறவியிலேயே பார்வையற்றவனாகவும் ஊமையாகவும் இருந்த தன் மகனுக்கு பார்வை மற்றும் பேச்சுத்திறனை கொடுக்குமாறு மன்றாடினார். மணிகண்டன் தனது தெய்வீக திருக்கரங்களை குருவுடைய மகனின் தலையில் வைத்த அடுத்த நிமிடம் உடனடியாக அந்த பையனுக்கு பார்வையும் பேச்சுத்திறனும் கிடைத்தது. தனது அதிசய




சூட்டுவது முறையாகாது என்று கூறி ராணியின் மனதில் நஞ்சை விதைத்தார். மகாராணியை நோய்வாய்ப்பட்டவராக நடிக்குமாறு தூண்டினார்.

புலிப்பாலைத் தடவினால் மட்டுமே உங்கள் நோயை குணப்படுத்த முடியும் என்று ராஜ

வைத்தியர் அறிவிப்பார் என்று ராணிக்கு உறுதியளித்தான். புலிப்பால் கொண்டுவர கொடிய காட்டு விலங்குகளுக்கு இரையாகக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கும் அடர்ந்த வனப் பகுதிக்கு செல்லுமாறு மணிகண்டன் நிர்ப்பந்திக்கப்பட்டார். அந்தப் பணியை முடிக்காமல் நாடு திரும்பினாலும் ராஜசேகரனுக்கு மணிகண்டன் மீதுள்ள அன்பு முன்பு போலவே இருக்கும். தனது சொந்த மகன் மீது இருக்கும் கண்மூடித்தனமான பாசத்தால் மதியிழந்த மகாராணி மந்திரியுடன் இணைந்து கூட்டு சதியில் பங்கேற்று பயங்கரமான தலைவலியால் அவதிப்படுவதை போல நடிக்கத் தொடங்கினாள்.

மந்திரியின் கூட்டு சதியில் பங்கேற்ற மருத்துவர்கள் ஒரு தாய்ப்பாலூட்டும் பெண் புலியின் பால் கிடைத்தால் மட்டுமே மகாராணியின் நோயை குணப்படுத்த முடியும் என்று அறிவித்தார்கள். நோய்வாய்ப்பட்ட மகாராணியை குணப்படுத்தினால் தனது சாம்ராஜ்யத்தில் பாதியை எழுதித் தருவதாக மன்னர் ராஜசேகரன் அறிவித்தார். புலிப்பால் கொண்டு வருவதற்காக ராஜசேகரனால் அனுப்பப்பட்ட தளபதிகளின் படை வெறுங்கையுடன் நாடு திரும்பியது.

மணிகண்டன் உதவ முன்வந்தான் ஆனால்



சிறுவனின் சிறுவயது மற்றும் வரவிருக்கும் முடிசூட்டுவிழா ஆகிய காரணங்களை சொல்லி மன்னர் மணிகண்டனின் வேண்டுகோளுக்கு செவி சாய்க்க மறுத்துவிட்டார். இதற்கெல்லாம் சலிக்காத மணிகண்டன் தனக்கு இந்த ஒரு விருப்பத்தை மட்டும் நிறைவு செய்யும்படி தந்தையிடம் தொடர்ந்து வற்புறுத்தினார். மகனின் இந்த முடிவில் மகிழ்ச்சியற்ற பெற்றோராக மன்னர் வருத்தம் தெரிவித்தார். ஆனால் இந்த வாய்ப்பை அழுத்தமாக பிடித்துக் கொண்ட மணிகண்டன் தன்னை புலிப்பால் கொண்டு வருவதற்கு அனுமதிக்குமாறு தொடர்ந்து மன்னருக்கு அழுத்தம் கொடுத்தார்.


வனப்பகுதிக்கு செல்வதற்கு வீரர்களின் ஒரு குழுவை ஏற்பாடு செய்யும் ராஜசேகரனின் முயற்சிகளையும் மணிகண்டன் நிறுத்திவிட்டார். படை கூட்டத்தைக் கண்டால் அமைதி இழந்து புலி பயந்து ஓடிவிடும் என்று வாதிட்டார். மன்னர் ராஜசேகரன் வேறு வழியின்றி அரை மனதுடன் மகனை வழியனுப்பி வைத்தார். மணிகண்டனுக்கு வழியில் சாப்பிடும் உணவுப் பொருட்கள் மற்றும் சிவபெருமானின் உருவகமாக கருதப்படும் மூன்று கண்களை கொண்ட நெய்த் தேங்காயை கொடுத்தனுப்பினார்.

சிவபெருமானின் பஞ்பூத கணங்களும் மணிகண்டன் காட்டை நோக்கி பயணிக்கத் தொடங்கியதும் பின்தொடர்ந்தனர். ஆனால் வழியில் தேவலோகத்தில் மகிஷியின் அட்டூழியங்களை கண்ட மணிகண்டன் சினம் கொண்டு அவளை பூமியில் வீசி எறிந்தார். அவள் அழுதா நதிக்கரையில் வந்து விழுந்தாள். விரைவில் இரத்தப் போர் தொடங்கியது.

இறுதியில் மணிகண்டன் மகிஷியின் மார்பில் ஏறி ஆக்ரோஷமாக நடனமாடத் தொடங்கினார். அந்த நடனத்தால் பூலோகமும் தேவலோகமும் அதிர்ந்தது. தேவர்களும் நடுநடுங்கிப் போயினர். அப்போது தன் மீது ஏறி நிற்கும் அந்த தெய்வ அவதாரம் ஹரி ஹரனின் மகன் என்று மகிஷி உணர்ந்து கொண்டாள். சிறுவன் காலடியில் அடிபணிந்து தொழுது பின்னர் உயிரை விட்டாள்.

மாளிகைபுரத்து அம்மா இந்த நடனத்தை சிவபெருமானும் மகாவிஷ்ணுவும் கண்டுகளித்த இடம் காளைகட்டி என்றழைக்கப்படுகிறது. கரம்பன் என்கிற காவலனின் மகள் லீலா என்பவளே மகிஷி உருவில் இருந்ததாகவும்

ஸ்ரீதர்மசாஸ்தாவின் அருளால் சாப விமோசனம் பெற்று மோட்சத்தை அடைந்ததாகவும் சொல்லப்படுகிறது. சபரிமலையில் இவளுக்கு மாளிகைபுரத்து அம்மா என்கிற பெயரில் கோவில் இருக்கிறது.மகிஷியை வென்ற மணிகண்டன் புலிப்பால் தேடி காட்டிற்கு சென்றார். அங்கே





சிவ தரிசனம் செய்த மணிகண்டனிடம் சிவபெருமான், ‘உன் அவதார நோக்கமான தெய்வீகத் திருப்பணியை முடித்து விட்டாய் இருந்தாலும் நீ நிறைவு செய்ய வேண்டிய மற்றொரு மிகப்பெரிய பணி ஒன்று இருக்கிறது’ என்றார். ‘நீ பத்திரமாக திரும்பி வர வேண்டுமென்று வருத்தத்துடன் காத்திருக்கும் உன் தந்தை மற்றும் நோய்வாய்ப்பட்ட உன் தாயாரை விரைவில் போய் பார்’ என்று நினைவுபடுத்தினார்.

மேலும் புலிப்பால் கொண்டு செல்லும் பணியில் தேவேந்திரன் உனக்கு உதவி செய்வார் என்று உறுதிய ளித்தார். அதன்படி மணிகண்டன் புலி உருவெடுத்த தேவேந்திரன் மீதேறி அமர்ந்து தேவர்களும் தேவ கன்னிகைகளும் ஆண் மற்றும் பெண் புலிகளாக புடைசூழ அரண்மனையை நோக்கி பயணித்தார்.

புலிகள் புடைசூழ மணிகண்டன் புலி மீது ஏறி வரும் சிறுவனைப் பார்த்து பயந்துபோன பந்தள நாட்டு மக்கள் அலறியடித்துக் கொண்டு ஓடி ஆங்காங்கே ஒளிந்து கொண்டனர். அப்போது முதன்முதலில் காட்டில் மணிகண்டனை ராஜசேகரன் கண்டெடுத்த போது தோன்றிய அதே முனிவர் இப்போதும் தோன்றி திகைப்பில் ஆழ்ந்த பந்தள நாட்டு குடிமக்களுக்கு மணிகண்டனின் உண்மையான தெய்வீக அவதாரத்தைப் பற்றி எடுத்துரைத்தார்.

புலிகள் புடைசூழ மணிகண்டன் அரண்மனை கதவை நோக்கி வந்தபோது மன்னர் கவலை தோய்ந்த முகத்துடன் அமைதியாக அமர்ந்திருந்தார். புலி மேலிருந்து இறங்கிய மணிகண்டன் இப்போது மகாராணியாருடைய இனம் தெரியாத நோய்க்கு புலிப்பாலை எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்.

மகாராணியுடைய பாசாங்கை புரிந்துகொண்ட மன்னர் அதற்குமேல் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் சிறுவனின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து மன்னித்து விடுமாறு வேண்டினார்.

மகாராணியின் நோய் நீங்கியவுடன் மணிகண்டன் அரண்மனையை விட்டு வெளியேறி காட்டிற்கு சென்று விட்டார். மணிகண்டன் காட்டிற்கு சென்ற அந்த நாளில் அவருக்கு பன்னிரெண்டாவது வயது தொடங்கியது.

கோயில் இடத்தை தேர்வு செய்த மணிகண்டன் மணிகண்டன் காட்டிற்கு சென்றதற்கு காரணமான மந்திரியை ராஜசேகரன் தண்டிக்க முடிவு செய்தார். இருந்தாலும் தெய்வீக விருப்பத்திற்கிணங்க அந்த முடிவை நிறுத்தினார். மேலும் மணிகண்டன் மகிஷியை அழிப்பதற்காக இது தானே மேற்கொண்ட நாடகம் என்று தந்தைக்கு புரிய வைத்தார். தன்னுடைய தெய்வ காரியம் நிறைவடைந்து விட்டதால் தான் தேவலோகத்திற்கு திரும்ப வேண்டும் என்று சொன்னார்.

புறப்படுவதற்கு முன் தந்தை ராஜசேகரனின் அளவில்லாத பக்தியை கண்டு மெச்சிய மணிகண்டன் மன்னருக்கு ஒரு வரம் கொடுக்க விரும்புவதாக சொன்னார். உடனடியாக மன்னர் ராஜசேகரன் மணிகண்டனின் நினைவாக தான் ஒரு கோயிலை கட்ட விரும்புவதாகவும் கோயில் கட்டுவதற்கு பொருத்தமான இடத்தை பரிந்துரைக்குமாறு மணிகண்டனிடம் மன்றாடினார்.

உடனே மணிகண்டன் தன்னுடைய அம்பை எடுத்து வில்லை எறிந்தார். அது ஒரு இடத்தில் சென்று தைத்தது. அந்த இடம் ராமாயண காலத்தில் ஸ்ரீ ராமரை நோக்கி சபரி என்கிற பெண் துறவி தவமிருந்த இடமாகும். அந்த இடம் தான் சபரிமலை. சபரிமலையில் தனக்கு கோயில் கட்டும்படி மன்னர் ராஜசேகரனிடம் கூறிய மணிகண்டன் உடனடியாக மாயமானார்.

அதற்குப் பிறகு அகஸ்திய முனிவரின் வழிகாட்டுதலின்படி மன்னர் ராஜசேகரன் சபரிமலை கோவிலுக்கு அடிக்கல்



நாட்டினார். 41 நாள் கடுமையான விரதமிருந்து தன்னை தரிசிக்க வருபவர்களுக்கு மட்டுமே தரிசனம் கொடுப்பேன் என்று மணிகண்டன் அசரீரியாகச் சொன்னார்.

அதேநேரத்தில் மன்னர் ராஜசேகரன் கோயில் கட்டும் பணியை முடித்தார். கோவில் கர்ப்பக்கிரகத்தை அடைவதற்கு புனிதமான பதினெட்டு படிகளையும் அமைத்தார். ஆனால் இறைவனின் சிலையை நிறுவும்போது மன்னருக்கு குழப்பங்கள் ஏற்பட்டது. அப்போது சுவாமி ஐயப்பனின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தது.

பம்பை நதி கங்கை நதியை போன்ற புனிதமான நதியாகும். சபரிமலை காசியை போன்ற புனித ஸ்தலமாகும். அப்போது தர்ம சாஸ்தாவால் அனுப்பப்பட்ட பரசுராமன் கடலுக்கு அடிப்பகுதியிலிருந்து கேரள நிலத்தை சபரிமலையின் உயரத்திற்கு எழுப்பி அவரே ஐயப்ப சுவாமியின் திருவுருவத்தை சிலையாக செதுக்கி மகரசங்கராந்தி நாளன்று பிரதிஷ்டை செய்தார்.

–சிவசௌந்தர்


**அருள் ராஜயோகம், ஆன்மீகம் ஜோதிட மருத்துவ மாத இதழ்**
**புது எண் 139, பழைய 7, பண்ணா பிளசா, ஆற்காடு ரோடு**
**கோடம்பாக்கம், சென்னை–600 024**

அன்புடையீர்,

அருள் ராஜயோகம் மாதஇதழுக்கு ஆயுள் சந்தா ரூ. 5000/– செலுத்த விரும்புகிறேன். மாதா மாதம் இதழ்களை அனுப்பி வைக்கவும். நன்றி!

பெயர் ; ______________________

முகவரி ; ______________________

______________________

______________________

பணம் செலுத்தும் விவரம் (டிக் செய்து விபரங்களை குறிப்பிடவும்)

☐ பணவிடை ____________ ☐ காசோலை ____________

☐ கேட்போலை ____________ ☐ ரொக்கம் ____________

**சந்தாப் படிவம்**

சந்தாதாரர் கையொப்பம்


கேரளாவில் அமைந்த சபரிமலை ஐயப்பன் கோவில், மிகவும் பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றாகும். இங்கு நாடு முழுவதும் இருந்து ஏராளமானவர்கள் வருகை தருவார்கள்.

அதுவும் கார்த்திகை மாதம் 1ந் தேதி மாலை போட்டு விரதம் இருந்து ஐயப்பன் கோவிலுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். அந்த வகையில் இந்த ஆண்டும் சில கட்டுப்பாடுகளின் அடிப்படையில் சபரிமலை ஐயப்பன் கோவில் வழிபாடு நடைபெற உள்ளது. எனவே வருகிற கார்த்திகை 1ந் தேதி முதல் பக்தர்கள் பலரும் மாலை அணிந்து விரதம் இருந்து ஐயப்பன் கோவிலுக்குச் செல்வார்கள். இந்தக் கோவிலின் சிறப்புகளைப் பற்றி இங்கே பார்க்கலாம். சபரிமலை ஐயப்பன் கோவிலின் சன்னிதானத்தில் மேற்கூரைப் பகுதியில் 'தத்துவமசி' என்று எழுதப்பட்டிருக்கும். இதற்கு 'நீ எதை நாடி வந்தாயோ, அது நீயாகவே இருக்கிறாய்' என்பது பொருளாகும்.



# மாமலை என்னும் சபரி மலை!






- சபரிமலைக்கு முதன் முதலில் மாலை அணிந்து செல்பவர்கள், *48* மைல் கொண்ட பெரிய பாதையில் செல்ல வேண்டும் என்பது மரபு.

- சபரிமலை ஐயப்பனை நினைத்து மாலை அணிபவர்கள், அந்த மாலை தன் நெஞ்சில் படும்போதெல்லாம், ஐயப்பன் நம் மனசாட்சியை தட்டிக் கொண்டே இருக்கிறார் என்பதை உணர்வதாகக் கூறப்படுகிறது.

  மகிஷியை வதம் செய்த மணிகண்டன், அந்த அரக்கியின் உடல் வளர்ந்து பூமியின் மேல் பகுதிக்கு வரக்கூடாது என்பதற்காக, அவள் உடல் மீது கனமான கல்லை வைத்ததாக தல புராணம் சொல்கிறது. இதை நினைவுகூரும் வகையில்தான், அழுதா நதியில் எடுக்கப்படும் கற்களை, பக்தர்கள் கல்லிடும்குன்று என்ற பகுதியில் போடுகிறார்கள்.

- மனிதனின் மனதில் உள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களை விரட்டும் வகையில்தான், சபரிமலை பதினெட்டாம் படியில் மூன்று கண்களைக் கொண்ட தேங்காய் உடைக்கப்படுகிறதாம். அந்த பதினெட்டாம் படியில் ஏறும்போது பக்தர்கள் அனைவரும் ஐயப்பனிடம் கோரிக்கை வைத்தால் அது உடனடியாக நிறைவேறுமாம். எனவே எவ்வளவு கூட்ட நெரிசலைச் சந்தித்தாலும், பதினெட்டாம் படியில் வைக்கும் கோரிக்கையை பக்தர்கள் எவரும் மறப்பதில்லை என்கிறார்கள்.

- திருப்பதி லட்டு, பழனி பஞ்சாமிர்தம் போல, சபரிமலை ஐயப்பன் கோவிலில் வழங்கப்படும் 'அரவனை பாயசம்' மிகவும் புகழ்பெற்றது. அரிசி, நெய், சர்க்கரை, ஏலக்காய் கலந்து இந்த பிரசாதம் தயாரிக்கப்படுகிறது.

- சபரிமலை பொன்னம்பல மேட்டில் மகர சங்கராந்தி அன்று தோன்றும் மகர ஜோதியை, அப்பாச்சிமேடு, பம்பை, பெரியானை வட்டம், புல்மேடு ஆகிய இடங்களில் இருந்தும் காணலாம். புல்மேடு பகுதியில்தான் இந்த ஜோதி நன்றாக தெரியும்.

- சபரிமலை ஐயப்பனுக்கு, விபூதி, சந்தனம், பால், பன்னீர், *108* ஒரு ரூபாய் நாணயம், தேன், பஞ்சாமிர்தம், இளநீர் ஆகிய எட்டு பொருட்களைக் கொண்டு அபிஷேகம் செய்வார்கள். இதற்கு 'அஷ்டாபிஷேகம்' என்று பெயர்.

- சபரிமலை ஐயப்பனின் உற்சவர் திருமேனி, ஆண்டுக்கு ஒரு முறை பம்பை ஆற்றுக்கு கொண்டு வரப்பட்டு ஆராட்டு உற்சவம் செய்யப்படும்.

  பிறகு ஐயப்பனை அலங்கரித்து பம்பா விநாயகர் கோவில் முன்பு மக்கள் தரிசனத்துக்காக *3* மணி நேரம் வைப்பார்கள். சபரிமலை வர இயலாத *50* வயதுக்குட்பட்ட பெண்கள் இந்த சமயத்தில், ஐயப்பனின் உற்சவர் திருமேனியை தரிசிக்க முடியும்.



–குருநாதன்

# தத்துவமசி சொல்லும் தத்துவம்

ஐயப்பன் கோவிலில் 18 படிகளுக்கு மேல், **தத்துவமசி என்ற மகா வாக்கியம் எழுதப்பட்டுள்ளது. இதை தத்துவம் அஸி என பிரித்து படிக்க வேண்டும்.** " நீ எதை தேடி வந்தாயோ அது உன்னிடமே உள்ளது" என்பது தான் இதன் பொருள். ஐயப்பன் என்ற சொல்லுக்கு நான் உனக்குள் இருக்கிறேன் என்பது தான் பொருள். அனைத்து ஆன் மாவோடு கலந்துள்ள இறைவனை உணர்ந்து, இறை நிலைக்கு மனிதன் உயர வேண்டும் என்ற மகா தத்துவத்தை உணர்த்துவது தான் ஐயப்ப விரத மற்றும் வழிபாட்டின் முக்கிய அம்சமாகும்.

**சபரிமலை பிரசாதம் :**

நீண்ட நாட்களானாலும் கெட்டு போகக் கூடாது என ஐயப்பனுக்காக பந்தள மன்னன் எடுத்துச் சென்ற அரவனை பாயசம், உன்னி அப்பம் போன்றவைகளே தற்போது வரை சபரிமலையில் பக்தர்களுக்கு பிரசாதம் ஆக கொடுக்கப்பட்டு வருகிறது. இதில் அரவனை பாயசம் என்பது பச்சரிசி, வெல்லம், நெய் சேர்த்து செய்யப்படுவதாகவும். பக்தர்கள் இருமுடியில் கொண்டு செல்லும் தேங்காயில் உள்ள நெய்யை ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்து, ஐயனின் திருமேனி தீண்டிய நெய்யினை பிரசாதமாக பக்தர்களுக்கு தருகிறார்கள். இந்த நெய்யான ஒரு ஆண்டு ஆனாலும் கூட அதே நறுமணம் மாறாமல் கெட்டு போகாமல் இருக்கும். இந்த நெய்யினை ஒரு மண்டலம் சாப்பிட்டால் தீராத நோய்கள் எல்லாம் தீரும் என்பது நம்பிக்கை.





உங்கள்
ஆதித்யா
TV யில்
★ 27 நட்சத்திரங்களை உள்ளடக்கிய 12 ராசிகளில் உங்கள் ராசிக்கான தின பலன்
★ வழிபட வேண்டிய தெய்வம்
★ ஆன்மீக தகவல்
யோகம் ராஜயோகம் நிகழ்ச்சியில்
தினந்தோறும் காலை 7.00 மணிக்கு காணத்தவறாதீர்கள்

# ராஜயோகம் ஆன்மீக அறக்கட்டளை...!

(GOVT REGD : 58/99 - 22 23)



கல்வி, மருத்துவம்,
கலாச்சரம், பண்பாடு,
உணவு, விளையாட்டு,
ஒழுக்கம் சார்ந்த
உதவிகள் மற்றும்
இந்துமத சாஸ்திர,
சம்பிரதாய ஆன்மீக
விழிப்புணர்வு
வழங்குதல்.

உதவும் உள்ளங்கள்
தொடர்பு கொள்ள
814 814 88 44 /
814 814 82 92
website:
www.rajayogamtrust.com

# ராஜயோகம் நிகழ்ச்சிகள்









# குலதெய்வ விருட்ஷம்

ஒன்பது கிரகங்கள், 12 ராசிகள்,
12 லக்கினங்கள், 15 திதிகள்,
27 நட்ஷத்திரங்கள், 27 பட்ஷிகள்,
27 விருட்ஷங்களுக்கான
சூட்சுமக் குறியிடுகளோடு
தெய்வப்பிரசன்ன
சாஸ்திரப்படி உருவாக்கப்பட்ட
"குலதெய்வ விருட்ஷம் "



“ராஜயோகம்”
Dr. K.ராம் Ph.D., (USA)



( height : 15 cms
width : 17 cms
weight : 489g )

குடும்ப ஒற்றுமை,
குபேர சம்பத்து,
காரிய வெற்றி, சத்ரு ஜெயம்,
நோய், கடன்,
திருமண தடைகள் விலகி,
பதினாறு செல்வங்கள்
கிடைப்பதற்க்காக
48 வகையான பூஜைகளால்
பூஜிக்கப்பட்ட ...

## "குலதெய்வ விருட்ஷம்"

## இது பொருள் அல்ல
## "குலதெய்வ அருள்"

**Order Now**
**99404 31377 | 99529 91118**
**website: www.kuladeivavirutcham.com**

# கட்டும் கட்டி!

# இருமுடி!

**சபரிமலை யாத்திரை செல்பவர்கள் இருமுடி சுமந்து செல்லும் பழக்கத்தை கடைபிடித்து வருகிறார்கள். இதற்கான காரணம் என்னவென்று அறிந்து கொள்ளலாம்.**



ஐயப்ப பக்தர்கள் தன் தலையில் தாங்கி நிற்கும் இருமுடியின் தத்துவத்தை தெரிந்து கொள்வது அவசியம். மணிகண்டன் என்ற நாமத்துடன் ஐயப்பசாமி பூவுலகில் ராஜசேகரன் மன்னன் மகனாக வாழ்ந்த போது புலிப்பால் கொண்டு வர காட்டுக்கு சென்றார்.

அப்போது குலதெய்வமாகிய சிவபெருமானை துணைக்கு அழைப்பது போல் 3 கண்ணுடைய தேங்காயை எடுத்துக் கொண்டு போகும்படி மணிகண்டனுக்கு மன்னன் ஆலோசனை சொன்னார். அவரும் அப்படி செய்தார். அதே பழக்கத்தைத்தான் இப்போது சபரிமலை யாத்திரை செல்பவர்கள் இருமுடி சுமந்து செல்வதன் மூலம் கடைபிடித்து வருகிறார்கள். இருமுடியில் ஒருபுறம் பக்தனுக்கு தேவையான பொருட்கள், யாத்திரை முடியும் போது ஐயப்ப பக்தன் தனக்கென்று கொண்டு போன பொருட்களை எல்லாம் காலி செய்து விடுகிறான்.

ஆண்டவனின் பதினெட்டு படிகளை கடக்கிறான். ஆண்டவனை நெருங்கும் வரை தான் தனக்கென்று தேவைப்படுகிறது. நெருங்கியவுடன் நமக்கென்று ஒன்றும் தேவை இல்லை எல்லாம் அவனுக்கே அர்ப்பணம் ஆகிவிடுகிறது என்பது தான் இருமுடியின் தத்துவம்.



## இருமுடி பொருட்கள்:

இருமுடி கட்டி சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் முன்முடியில் வைத்துக் கொள்ள வேண்டிய பொருட்கள்:

1. மஞ்சள் பொடி (குறைந்தது 100 கிராம்) (மலைநடை பகவதி, மஞ்சமாதாவுக்காக)
2. சந்தன பாக்கெட்
3. குங்கும பாக்கெட்
4. நெய் தேங்காய் 1
5. சுதாதமான பசுவின் நெய்
6. விடலை தேங்காய் 5 (எரிமேலி, சபரிபீடம், சரம்குத்தி, பதிட்டாம்படி ஏறும்போதும், இறங்கும்போதும்)
7. பன்னீர் பாட்டில் (சிறியது)
8. கற்பூர பாக்கெட்
9. பச்சரிசி
10. கருப்பு உலர் திராட்சை
11. பேரிச்சம்பழம், கற்கண்டு

பின் முடியில் சமையல் செய்து சாப்பிடுவதற்கு தேவையான பொருட்களை குறைந்த அளவு எடுத்து செல்லலாம். இதுவே நாம் இருமுடியை எடுத்து செல்லும் காரணம். ஸ்வாமியே சரணம் ஐயப்பா.

# நவம்பர் 2025 - ராசி



## மேஷம்

அதிகாரத்தோடும் சுறுசுறுப்போடும், அதிக நேரம் செயல்படக்கூடிய வல்லமை உள்ள மேஷ ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிர ஹமும், பஞ் சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!

புதிய பதவி, பொறுப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வழக்கு சாதகமாகும். சொத்து வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். குடும்பத்தினருடன் சென்று குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஓடி வந்து உதவுவார்கள். பழைய கடனைத் தீர்க்க புது வழி யோசிப்பீர்கள்.

அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். சில நாட்களில் தூக்கம் குறையும். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழந்துவிடாதீர்கள்.

**அனுகூலம் தரும் தேதி ; 3, 5, 6.**



## ரிஷபம்

முறையான வாழ்க்கையை சரியாக வாழ்ந்து வகையான செல்வத்தை வாழ்க்கையில் சேர்த்திடும் திறமைபடைத்த ரிஷப ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!

உங்களின் நிர்வாகத் திறன் அதிகரிக்கும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். சிலருக்கு புது வேலையும் கிடைக்கும். வழக்குகள் சாதகமாகும். கௌரவப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். திருமணத் தடைகள் விலகும். மனைவி வழியில் உதவிகள் உண்டு. மனைவிவழி உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அவர்கள் உங்களின் புதுத் திட்டங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பழைய உறவினர், நண்பர்களை சந்தித்து மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள்.

**அனுகூலம் தரும் தேதி ; 4, 5, 7**



## மிதுனம்

புதன் பகவானின் ஆதிக்கத்தால் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் கூடுதலாக அமையப்பெற்ற மிதுன ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!

ராஜ தந்திரத்தை பயன்படுத்தி பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறை மூலமாக தீர்வு காண்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். வழக்கில் திடீர் திருப்பம் உண்டாகும். முன்கோபத்தால் இரத்த அழுத்தம், சகோதர வகையில் சங்கடங்கள், சொத்துப் பிரச்னைகள், பணத்தட்டுப்பாடுகளெல்லாம் வந்துச் செல்லும்.

**அனுகூலம் தரும் தேதி ; 2, 4, 6, 9.**



## கடகம்

**இரவுநேர சிந்தனைகளாலும், செயல் பாடுகளாலும் சிறப்புகள் அதிகம் அமையப்பெற்ற கடக ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனு கிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!**

இடம், பொருள், ஏவலறிந்து பேசும் வித்தையைக் கற்றுக் கொள்வீர்கள். அனுபவ அறிவால் முன்னேற்றம் உண்டாகும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். புது ரக ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். பழைய வாகனத்தை மாற்றி புதுசு வாங்குவீர்கள். தந்தைவழியில் உதவிகள் உண்டு. சூரியன் சாதகமான வீடுகளில் செல்வதால் அரசால் அனுகூலம் உண்டு. அரசு காரியங்கள் விரைந்து முடியும். வழக்குகளும் சாதகமாகும். அடிமனதில் தைரியம் பிறக்கும்.

**அனுகூலம் தரும் தேதி ; 1, 2, 3, 7.**



## சிம்மம்

கலவரமான சூழ்நிலைகளில் கூட கௌரவமாக வாழத் தெரிந்து வைத்திருக்கும் சிம்ம ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்!

கடன் உதவி எதிர்பார்த்த வகையில் வந்து சேரும். வி.ஐ.பிகளின் நட்பு கிடைக்கும். வெளிநாட்டிலிருக்கும் நண்பர்களால் உதவிகள் உண்டு. பழைய இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். பிறமொழி பேசுபவர்களால் திடீர் திருப்பம் உண்டாகும். சிறுக சிறுக சேமித்து வைத்ததில் சின்னதாக ஒரு இடம் வாங்க முயற்சி செய்வீர்கள். மூத்த சகோதரர்களால் ஆதாயம் உண்டு. வீட்டை விரிவுப்படுத்துவது, அழகுப்படுத்துவது போன்ற முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**அனுகூலம் தரும் தேதி ரு 1, 5, 8**

## கன்னி

பல விஷயங்களில் சிக்கனமாகவும், குடும்ப விஷயங்களில் தாராளமாகவும் உள்ள கன்னி ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்

உங்களுடைய அறிவுத் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். அனுபவ அறிவைப் பயன்படுத்தி முன்னேறுவீர்கள். வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அதிகாரப் பதவியில் வழக்கில் வெற்றி பெறுவீர்கள். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டாகும். வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் உங்களின் முக்கியத்துவத்தையும், உண்மையான பாசத்தையும் உணர்ந்துக் கொள்வார்கள்.

**அனுகூலம் தரும் தேதி ரு 4, 7**



# நவம்பர் 2025 - ராசி பலன்கள்




## துலாம்

**எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய தன்மை இயல்பாகவே அமையப்பெற்ற துலாம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!**

ஆன்மிக அறிஞர்களின் நட்பு கிடைக்கும். வீரியத்தை விட காரியம் தான் முக்கியம் என்பதை உணருவீர்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட சுகமான அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். வெளிவட்டாரத்திலும் மதிப்பு, மரியாதைக் கூடும். ஷேர் மூலம் பணம் வரும். அயல்நாட்டில் இருக்கும் நண்பர்களால் ஆதாயம் உண்டு. சுக்ரனால் உங்களின் தோற்றப் பொலிவு கூடும். கவர்ச்சிகரமாகப் பேசி எல்லோரையும் ஈர்ப்பீர்கள்.

**அனுகூலம் தரும் தேதி ; 2, 4, 6**



## விருச்சிகம்

**அரும்பும் எதிர்ப்புகளை அடியோடு தகர்த்தெறிந்து ஆனந்தமாய் வாழத் தெரிந்த விருச்சிகம் ராசி பாக்கியவான்களுக்கு நவகிரக அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாக கிடைத்திட வாழ்த்துக்கள்**

இந்த மாதம் உடல் ஆரோக்கியத்தில் மிகவும் கவனமுடன் நடந்து கொள்வது நல்லது. ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பதும், தேவையற்ற பயணங்களைத் தவிர்ப்பதும் உத்தமம். பணவரவுகள் சுமாராகத் தானிருக்கும். செலவுகளில் சிக்கனத்தை கடைபிடிக்கவும். எந்தவொரு காரியத்திலும் சிந்தித்துச் செயல்பட்டால் மட்டுமே வெற்றியினைப் பெறமுடியும். முடிந்தால் திருவண்ணாமலை கிரிவலம் போய் வரவும். மனைவியுடனான மோதல்கள் குறையும். அவரின் ஆரோக்யமும் சீராகும்.

**அனுகூலம் தரும் தேதி : 1, 2, 8**

## தனுசு



**சாதாரண சூழ்நிலைகளையும் தோதாகப் பயன்படுத்தி சந்தோஷ நிலைகளை வளர்த்துக் கொள்ளும் தனுசு ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ, அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்**

பெரிய மனிதர்களின் நட்பு கிட்டும். எங்கு சென்றாலும் முதல் மரியாதை கிடைக்கும். வேற்றுமதம் மற்றும் மாநிலத்தவர்களால் ஆதாயம் அடைவீர்கள். சுறுசுறுப்பாக செயல்பட்டு தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். நீங்கள் சொல்லாததையும் சொன்னதாக நினைத்துக் கொண்டு விலகிச் சென்ற உறவினர், நண்பர்கள் மீண்டும் தேடி வந்து பேசுவார்கள். பழைய கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய வழி பிறக்கும்.

**அனுகூலம் தரும் தேதி ரு 4, 5.**

2025 ஆம் ஆண்டிற்கான தினசரி ராசிபலன்களையும், பரிகாரங்களையும்
“ராஜயோகம்” YouTube சேனலில் காணலாம்



## மகரம்

நிலையில்லாத காலங்களில்கூட வளமான மனோநிலை அமையப் பெற்ற மகர ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!

மாறுபட்ட யோசனைகள் மனதில் தோன்றும். பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். ஷேர் மூலம் பணம் வரும். அரசு காரியங்கள் விரைந்து முடியும். கௌரவப் பதவிகள் தேடி வரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். புது வேலைக்கு முயற்சி செய்தீர்களே! நல்ல பதில் வரும். எதிர்ப்புகள் குறையும். மகளுக்கு நீங்கள் எதிர்பார்த்த குடும்பத்திலிருந்து உங்கள் ரசனைக் கேற்ப நல்ல வரன் வந்தமையும்.

**அனுகூலம் தரும் தேதி : 7, 9.**



## கும்பம்

குழந்தைத்தனமான சுபாவத்தால் கோபம் வந்தால்கூட கட்டுப்படுத்தத் தெரியாத கும்ப ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!

பிளான்களுக்கு அப்ரூவல் கிடைத்து உடனடியாக வீடு கட்டத் தொடங்குவீர்கள். அரசால் அனுகூலம் உண்டாகும். அரசியலில் செல்வாக்குக் கூடும். பொது விழாக்கள், சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதைக் கிடைக்கும். புது பதவிக்கு உங்களுடைய பெயர் பரிந்துரை செய்யப்படும். வேலைக்கு விண்ணப்பித்து இருப்பவர்களுக்கு நல்ல நிறுவனத்திலிருந்து அழைப்பு வரும். மற்றவர்களை நம்பி பெரிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம்.

**அனுகூலம் தரும் தேதி ; 2, 5**

## மீனம்

கபடமற்ற அனுபவமும் மன்னிக்கும் மனோநிலையும் ஒருங்கே அமையப்பெற்ற மீன ராசி பாக்கியவான்களுக்கு நவகிரஹ அனுகிரஹமும், பஞ்சபூத பாக்கியமும் ஆதிக்கமாகக் கிடைத்திட வாழ்த்துக்கள்!



குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களுடைய ஆலோசனைகளையும் எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். குழந்தை பாக்யம் கிடைக்கும். திருமணம் தள்ளிப் போனவர்களுக்குக் கூடி வரும். வேற்றுமதத்தை சார்ந்தவர்களால் உங்கள் வாழ்க்கை தரம் உயரும். பழைய பிரச்னைகளுக்கும் தீர்வு கிடைக்கும். பூர்வீக சொத்தில் மராமத்துப் பணிகள் செய்வீர்கள். சொந்தபந்தங்களின் அன்புத் தொல்லைகள் குறையும். வெள்ளிப் பொருட்கள், விலை உயர்ந்த ரத்தினங்கள், ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**அனுகூலம் தரும் தேதி ; 1, 3**

# திருமண கோளத்தில் அருளும் ஸ்ரீ தர்மசாஸ்தா

**ஐயப்பனுக்கு திருமணம் ஆகிவிட்டது... அதுவும் இரண்டு மனைவி, ஒரு மகனும் உண்டு...! ஹரி ஹர புத்திரன் ஐயப்ப சுவாமி பிரம்மச்சாரி என பலரும் நம்பி வரும் நிலையில், அவருக்கு திருமணம் ஆகி விட்டது. அவருக்கு இரு மனைவியும், அதோடு ஒரு மகனும் உள்ளார் என நம்பப்படுகிறது.**

பொதுவாக ஐயப்பனை பிரம்மச்சாரி கடவுள் என அழைப்பார்கள். ஆனால் அவர் கிரகஸ்தராக காட்சி தரும் ஆலயம் தான் ஆரியங்காவில் உள்ள ஸ்ரீ தர்மசாஸ்தா திருக்கோயில். சபரிமலையில் வீற்றிருக்கும் ஐயப்பன் பிரம்மச்சாரியாகவும், அவரை தரிசிக்க ஆண்கள் மட்டும் சென்று வருகின்றனர். பெண்கள் செல்ல அனுமதிக்க வேண்டும் என வழக்கு நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் தம்பதியாக காட்சி தரும் ஆரியங்காவில் சாஸ்தா கோவிலில் பெண்கள் தம்பதியராக தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். கோயில் குறித்த முழு தகவலை இங்கு காண்போம்.

மூலவராக ஐயப்பன் தம்பதியராகக் காட்சி தருகின்றார். அருகில் சிவ லிங்கம் காணப் படுகின்றது.

கோயில் அமைந்துள்ள இடம்: கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் உள்ள ஆரியங்காவு என்ற இடத்தில் தமிழகத்தின் நெல்லை செங்கோட்டையிலிருந்து சுமார் 23 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. திருவனந்தபுரத்திற்கு செல்லும் பேருந்துகள் இந்த கோயில் வழியாக தான் செல்லும்.

**கோயில் வரலாறு**

திருவிதாங்கூர் மன்னருக்கு பட்டு வஸ்திர துணிகளை நெய்து தரும் பணிகளில் மதுரையைச் சேர்ந்த சௌராஷ்டிரா சமூகத்தை சேர்ந்த சிலர் ஈடுபட்டிருந்தனர். அப்படி நெய்யப்படும் பட்டுத் துணிகள் பாண்டிய நாட்டிலிருந்து திருவிதாங்கூர் அரண்மனைக்குக் கொண்டு செல்லும் பணிகளில் சிலர் ஈடுபட்டிருந்தனர்.


ஒருநாள் அப்படி பட்டு துணிகளை திருவிதாங்கூர் அரண்மனைக்கு கொண்டு செல்லும் பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர், பருவ வயதை அடைந்த தன் மகள் புஷ்கலாவையும் உடன் அழைத்துச் சென்றார். பாண்டிய நாடு வழியே பயணித்த அவர்கள், திருவிதாங்கூர் கணவாய் வழியே சென்று அரண்மனையை அடைய திட்டமிட்டிருந்தனர்.



அப்படி மலை பாதை வழியாக சென்ற அவர்கள், இருட்டியதால் மிகவும் பயந்து போனால் புஷ்கலா. அதனால் அவர் அருகில் இருந்த ஆரியங்காவில் தர்மசாஸ்தா கோயில் பூசாரியின் வீட்டில் தன் மகளை தங்க வைத்து, அவளை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள், தான் இந்த பட்டு வஸ்திரங்களை மன்னருக்கு கொடுத்துவிட்டு வந்துவிடுகிறேன் என்று கூறி புறப்பட்டு சென்றார்.

புஷ்கலாவோ தன்னால் முடிந்த அளவு தர்ம சாஸ்தாவுக்காக பூஜைக்கு பூக்களை பறித்துக் கொடுத்தல், நீர் சுமந்து செல்லுதல், கோலமிடுதல், கோயிலை அழகுபடுத்துதல் என வேலைகளை செய்து வந்தார். ஒரு கட்டத்தில் அவளது வாழ்க்கை ஐயப்பனுடன் ஐக்கியமானது. சாஸ்தா மீது காதல் பிறந்தது.

திருவிதாங்கூர் அரண்மனை சென்று திரும்பிக்கொண்டிருந்த வியாபாரியை மதம் கொண்ட ஒரு யானை துரத்தியது. அப்போது அவரை காப்பாற்றும் பொருட்டு அங்கு யானையை வழிமறித்து ஒரு இளைஞன் யானையை அடக்கி, அங்கிருந்து துரத்தி வியாபாரியை




ஆசுவாசப்படுத்தினான். இதனால் உயிர் தப்பித்த அந்த வியாபாரி, தான் என்ன கைமாறு செய்யப்போகிறேன் ஐயனே என கேட்டார். அதற்கு அந்த இளைஞன் உங்களின் மகளை எனக்கு திருமணம் செய்து தாருங்கள் என கேட்டார். அதற்கு அந்த வியாபாரியும் சம்மதித்தார். உடனே அந்த இளைஞன் அங்கிருந்து மாயமாக மறைந்துவிட்டார்.

ஆரியங்காவுக்கு வந்து சேர்ந்த வியாபாரிக்கு ஆச்சரியம் காத்திருந்தது. காட்டில் தன்னை காப்பாற்றிய இளைஞன் எந்த ரூபத்தில் காட்சி தந்தாரோ, அதே ரூபத்தில் ஐயப்பன் அங்கு எழுந்தருளியிருந்தார். வியாபாரிக்கு ஐயப்பன் தான் தன்னை காப்பாற்றியதும், தன் மகளை கரம்பற்ற நினைத்து அங்கு வந்தது தெரிந்தது. நடந்ததை கோயில் பூசாரியிடம் கூறினார். புஷ்கலாவும் தன் நிலையை கூற ஐயப்பனுடன் மகளை திருமணம் செய்து வைக்க சம்மதித்தார். இதற்கு திருவிதாங்கூர் மன்னரும் அனுமதி தர, திருமண ஏற்பாடுகளை செய்த வியாபாரி, மதுரையில்

**ஆர்யங்காவ் சாஸ்தா கோயிலில் கிருகஸ்தனாக அருள்பாலிக்கின்றார். திருமணத் தடை உள்ளவர்கள் இந்த கோயிலில் வேண்டிக்கொள்ள விரைவில் திருமணம் நடக்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது.**



இருக்கும் சொந்தங்களை அழைப்பு விடுத்தார். திருமண நாளி ஐயப்பன் நேரில் தோன்றி புஷ்கலாவை கரம் பிடித்து தன்னுள் ஏற்றுக் கொண்டார். ஒவ்வொரு ஆண்டும் ஐயப்பன் புஷ்கலா திருமண நிகழ்வு மார்கழி மாதத்தில் நடைப்பெற்று வருகின்றது. இந்த நிகழ்வின் போது மதுரையைச் சேர்ந்த சௌராஷ்டிரா சமூகத்தைச் சேர்ந்த சிலர் குலப் பெண்ணான புஷ்கலைக்கு சீதனம் எடுத்து சென்று நிகழ்வில் கலந்து கொள்கின்றனர். அதுமட்டுமல்லாமல் ஐயப்பனுக்கு பூரணி என்ற மனைவியும் உள்ளதாகவும், சத்யகா என்ற மகன் உள்ளதாக கூறப்படுகின்றது. சபரிமலையில் பிரம்மச்சரியாக வீற்றிருக்கும் ஐயப்பன், ஆர்யங்காவ் சாஸ்தா கோயிலில் கிருகஸ்தனாக அருள்பாலிக்கின்றார். திருமணத் தடை உள்ளவர்கள் இந்த கோயிலில் வேண்டிக்கொள்ள விரைவில் திருமணம் நடக்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது. ஐயப்பனுக்கு பல்வேறு கோயிலை கட்டியதாக கூறப்படும் ஸ்ரீ பரசுராமர் தான் இந்த கோயிலையும் கட்டியதாக நம்பப்படுகிறது.

–சுவாமி

# அச்சம் தீர்க்கும் அச்சன்கோவில்!



சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு அடுத்து பிரசித்தி பெற்றது அச்சன்கோவில் ஆகும். ஐயப்பனின் அறுபடை வீடுகளில் ஒன்று அச்சன்கோவில். அரசனாக ஐயப்பன் வீற்றிருக்கும் பகுதி தமிழக கேரள எல்லையில் உள்ள செங்கோட்டையில் இருந்து 28 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

கேரள மாநிலத்தின் அடர்ந்த வனப்பகுதியில் இயற்கை சூழ்நிலையில் இந்த ஸ்தலம் அமைந்துள்ளது. மண்டல மகேஸ்வர விழா இத்திருத்தலத்தின் முக்கிய திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. அச்சன்கோவிலில் மட்டுமே ஆதியில் பிரதிஷ்டை செய்யப்பட்ட மூல விக்கிரகம் உள்ளது குறிப்பிடத்தக்கது. பரசுராமரால் தோற்றுவிக்கப்பட்ட பல ஸ்தலங்களில் உள்ள ஐயப்பனின் விக்கிரங்கங்கள் தீயாலும், இயற்கை



சக்திகளாலும் பாதிப்படைந்து மாற்றப்பட்டவை. ஆனால் அச்சன்கோவில் ஐயப்பன் கோவிலில் மட்டும் பழைய விக்கிரகம் இன்றும் உள்ளது.

கார்த்திகை மாதம் 30 ஆம் தேதி அச்சன்கோவில் அரசனுக்கு திரு ஆபரணங்கள் கொண்டுவரப்படும். மார்கழி முதல் நாள் காலை கொடியேற்றத்துடன் திருவிழா நடக்கும். ஐயப்பனின் திருத்தலங்களிலேயே பத்து நாள் திருவிழா நடப்பது சபரிமலையிலும் அச்சன்கோவிலில் மட்டுமே.

அச்சங்கோவிலில் நடக்கும் விழாவில் 9வது நாள் அன்று தேரோட்டம் நடத்தப்படும். மற்ற ஐயப்பன் தலங்களில் தேரோட்டம் கிடையாது. ஐயப்பன் பயன்படுத்திய வாள் இத்திருத்தலத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது.



**விஷ பூச்சிகள் தீண்டினால் நள்ளிரவு நேரமானாலும் இங்குள்ள ஐயப்பன் கோவிலுக்கு சென்று மணி அடித்தால் நடைதிறக்கப்பட்டு அந்த கோவிலில் உள்ள தந்திரி மந்திரித்த தீர்த்தமும் ஐயப்பனின் விக்ரமும் மீதுள்ள சந்தனமும் தருவார். அவை தான் விஷக்கடிக்கான மருந்து. அதை அருந்தினால் உடலில் இருந்து முற்றிலுமாக விஷம் இறங்கி உடல் பூரண குணம் அடைகிறது.**

இங்கு சிவன் பார்வதி சன்னதிகளும் உள்ளன. இந்த சன்னதிகளுக்கு பின்னால் சுவாரஸ்யம் மிகுந்த பல கதைகள் உண்டு. இந்த கோயிலுக்கு ஒரு விசேஷம் உண்டு. விஷ பூச்சிகள் தீண்டினால் நள்ளிரவு நேரமானாலும் இங்குள்ள ஐயப்பன் கோவிலுக்கு சென்று மணி அடித்தால் நடைதிறக்கப்பட்டு அந்த கோவிலில் உள்ள தந்திரி மந்திரித்த தீர்த்தமும் ஐயப்பனின் விக்ரமும் மீதுள்ள சந்தனமும் தருவார். அவை தான் விஷக்கடிக்கான மருந்து.

அதை அருந்தினால் உடலில் இருந்து முற்றிலுமாக விஷம் இறங்கி உடல் பூரண குணம் அடைகிறது. இந்த நடைமுறை இன்றும் அந்த ஊரில் வழக்கத்தில்ல உள்ளது .இதற்காக வைத்தியரை நாடி யாரும் செல்வதில்லை.

–சிவா

**கேரள மாநிலம், கொல்லம் மாவட்டம், குளத்துப்புழா என்னும் இடத்தில் அமைந்திருக்கும் தலத்தில் ஐயப்பன் குழந்தைத் தோற்றத்தில் இருக்கிறார். இங்கிருக்கும் ஐயப்பனை 'பால சாஸ்தா' என்றும், 'குளத்துப்புழா பாலகன்' என்றும் போற்றுகின்றனர்.**




# 'குளத்துப்புழா பாலகன்'

கொட்டாரக்கரைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர், தனது பணியாளர்கள் சிலருடன் ராமேஸ்வரத்திற்குப் புனிதப் பயணம் சென்று திரும்பிக் கொண்டிருந்தார். காட்டின் வழியாக வந்து கொண்டிருந்த அவர், வழியில் இருந்த கல்லடையாற்றின் கரையில் தங்கி ஓய்வெடுத்தார். அவருடன் வந்த பணியாளர்கள், அங்கே உணவு தயாரிக்கும் பணியைத் தொடங்கினர்.

நிலத்தில் புதைந்திருந்த ஒரு கல்லைப் பார்த்த பணியாளர் ஒருவர், அந்தக் கல்லுடன் மேலும் இரு கற்களை வைத்து, அந்த இடத்தில் அடுப்பு மூட்டுவதென்று முடிவு செய்தார். பின்னர் அவர், அங்கே கிடைத்த இரண்டு கற்களை எடுத்துக் கொண்டு போய் நிலத்தில் புதைந்திருந்த கல்லின் அருகில் வைத்தார். அடுப்புக்காக வைத்திருந்த மூன்று கற்களில், நிலத்தில் புதைந்திருந்த கல் மட்டும் சிறிது உயரமாக இருந்தது.

உடனே அந்தப் பணியாளர், நிலத்தில் புதைந்திருந்த கல்லை, அதைவிடப் பெரிதான ஒரு கல்லை எடுத்துக் கொண்டு வந்து உடைக்க முயன்றார். அப்போது, நிலத்தில் புதைந்திருந்த கல் உடையாமல், உடைக்கப் பயன்படுத்திய பெரிய கல் எட்டுத் துண்டுகளாக உடைந்து போனது. உடைந்து போன எட்டுத் துண்டுக் கற்களில் இருந்தும் ரத்தம் வழியத் தொடங்கியது. அதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த பணியாளர், மற்ற பணியாளர்களை அழைத்து உடைந்த கற்களில் இருந்து ரத்தம் வழியும் செய்தியைச் சொன்னார். அவர்களும் அதனைக் கண்டு பயந்தனர். பின்னர் அவர்கள், தங்கள் உரிமையாளரான யாத்ரிகரிடம் சென்று நடந்ததைத் தெரிவித்தனர். அவர் உடைந்து கிடக்கும் கற்களிலிருந்து வழியும் ரத்தத்தை நிறுத்த முயற்சித்தார். ஆனால் முடியவில்லை. ராமேஸ்வரத்திலிருந்து தான் கொண்டு வந்திருந்த புனித நீரை உடைந்த கற்களின் மீது தெளித்தார். உடனே கற்களிலிருந்து வழிந்த ரத்தம் நின்று போனது.

அப்போது யாத்ரிகருக்கு, உடைந்து கிடப்பது சாதாரணமான கல் இல்லை என்பதும், அந்தக் கல் பரசுராமரால் நிறுவப்பட்ட தர்ம சாஸ்தா ஐயப்பன் உருவம் என்பதும் தெரிந்து மறைந்தது. அதனைத் தொடர்ந்து அவர், ஐயப்பனை நினைத்து வணங்கி, தனது பணியாளர்கள் தெரியாமல் செய்த தவறை






மன்னிக்க வேண்டினார். பின்னர் அவர், தனது பணியாளர்கள் செய்த தவறுக்குப் பரிகாரமாக, அந்த இடத்தில் பாலகன் உருவில் ஐயப்பனுக்குச் சிலையமைத்துக் கோவில் கட்ட முடிவு செய்தார்.

அங்கு நடந்ததைக் கேள்விப்பட்டக் கொட்டாரக்கரை மன்னர் அவ்விடத்திற்கு வந்து, பிராமணரின் கோவில் கட்டுமானப் பணிக்குத் தேவையான நிலத்தை வழங்கிப் பொருளுதவிகளையும் செய்தார் என்று இக்கோவிலின் தல வரலாறு சொல்லப்படுகிறது. இக்கோவில்

**இக்கோவில் பந்தளம் மன்னரால் கட்டப்பட்டது என்றும், இவ்விடத்தை யாத்ரிகர் கண்டறிந்து சொன்னார் என்றும் மற்றொரு வரலாற்றுத் தகவலும் தெரிவிக்கப்படுகிறது.**

பந்தளம் மன்னரால் கட்டப்பட்டது என்றும், இவ்விடத்தை யாத்ரிகர் கண்டறிந்து சொன்னார் என்றும் மற்றொரு வரலாற்றுத் தகவலும் தெரிவிக்கப்படுகிறது.

–பேரெழிலன்



# ஐயப்பன் அறிவோம் 20: குருதட்சணை

குருவின் கனிவான வாக்கை கேட்ட மணிகண்டன், தெய்வமானாலும் குரு முக்கியமானவர் என்பதால் எதையும் மறைக்கக்கூடாது என்ற நியதிக்கு ஏற்ப, தாங்கள் கூறுவது உண்மை, அப்படியே நடக்கும் என்கிறார்.

ராஜகுமாரனாகவே இருந்தாலும் குருவை அரண்மனைக்கு வரவழைத்து

“என் கண் முன்னேயே அற்புதம் நிகழ்த்திய நீ, என் குலத்தை காத்தருள வேண்டும்” என வேண்டுகிறார். “குருநாதரே... உங்கள் வேண்டுகோள் நிச்சயம் நிறைவேறும். தாங்கள் ஏற்கனவே கூறியது போல் எனது வரலாற்றில் உங்களுக்கும், உங்களது சந்ததியி னருக்கும் முக்கிய இடம் உண்டு” என அருள் வழங்கி, குருவிற்கு மாணவன் செய்ய வேண்டிய பாத பூஜைகள் செய்து, குருதட்சணை வழங்கி, அவரிடம் பரிபூரண ஆசி பெற்று



கல்வி கற்காமல், குருகுலத்திற்கு சென்று எளிமையாக, ஏற்றத்தாழ்வு இன்றி சாதாரண மாணவராக கற்று அனைத்திலும் தேர்ந்த தெய்வப்பிறவியான மணிகண்டனிடம், குரு அன்புடன் ஒரு வேண்டுகோள் விடுக்கிறார்.

வேண்டுகோளை கனிவாக கேட்ட மணிகண்டன், குருவின் விருப்பத்தை நிறைவேற்றுவது, பணி செய்வதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். தயங்காமல் கேளுங்கள் என்றார். ‘‘குருகுலத்தில் என்னுடன் இருக்கும் பிறவியிலேயே கண் தெரியாத, வாய் பேசமுடியாத என் மகனை நீ பார்த்திருக்கிறாய் அல்லவா? இது எனக்கு வாழ்நாள் கவலையாக உள்ளது. எனவே எனது மகனின் இந்த நிலை மாற அருள் புரிய வேண்டும்’’ என்கிறார்.

இதனை கேட்ட மணிகண்டன் உள்ளம் மகிழ்ந்து, ‘‘என்னால், தங்கள் மகனுக்கு புதிய வாழ்வு கிடைக்க வேண்டும் என்பது இறை விதி. அவரை பூரண குணமாக்குவது நான் எடுத்திருக்கும் அவதாரத்தின் நோக்கங்களில் ஒன்று. என் அருளாசி நிச்சயம் உண்டு’’ எனக் கூறி அந்த சிறுவனை கட்டி அணைக்கிறார். பின்னர், சிறுவனை கண் திறந்து பார்க்குமாறு மணிகண்டன் சொன்னவுடன், பார்வையற்ற அந்த சிறுவன் விழித்ததும் பார்வை வந்தது.

மேலும் உள்ள பள்ளி, கல்லூரி மாணவ – மாணவியருக்கு மனநலம், போதைப் பொருட்கள் பயன்பாட்டிற்கு எதிரான விழிப்புணர்வு பயிற்சி..!!'

சென்னை ஆலந்தூரில் பிரபல உணவக கட்டிடத்திற்கு சீல் வைத்த வருவாய்த்துறை அதிகாரிகள் ரூ.300 கோடி மதிப்புள்ள 15 கிரவுண்ட் நிலம் மீட்பு' திருவாரூர் அருகே நெல் ஈரப்பதம் குறித்து ஒன்றியக் குழுவினர் ஆய்வு..!!'

மோன்தா புயல் எதிரொலி: ஏனாமில் பகல் 12 மணிக்கே கடைகள், வணிக நிறுவனங்களை மூட புதுச்சேரி அரசு உத்தரவு' தேர்தல் ஆணையம் தற்போது 12 மாநிலங்களில் “வாக்கு திருட்டு” விளையாட்டை ஆடத் தயாராகியுள்ளது: செல்வப்பெருந்தகை குற்றச்சாட்டு' பேசச் சொன்னதும் பேச்சும் வந்தது. இதனால் ஆச்சரியமடைந்த குரு, நன்றியுடன் மணிகண்டனை வணங்குகிறார்.

‘‘குருவே எனது சக்தியால் இது நடந்தது குறித்து யாரிடமும் சொல்ல வேண்டாம். காலம் வரும்போது அனைவரும் உணர்வார்கள்’’ என அன்பு வேண்டுகோள் வைக்கிறார். இதனால் மகிழ்ச்சியடைந்த குருநாதர், “என் கண் முன்னேயே அற்புதம் நிகழ்த்திய நீ, என் குலத்தை காத்தருள வேண்டும்” என வேண்டுகிறார். “குருநாதரே...

உங்கள் வேண்டுகோள் நிச்சயம் நிறைவேறும். தாங்கள் ஏற்கனவே கூறியது போல் எனது வரலாற்றில் உங்களுக்கும், உங்களது சந்ததியி னருக்கும் முக்கிய இடம் உண்டு” என அருள் வழங்கி, குருவிற்கு மாணவன் செய்ய வேண்டிய பாத பூஜைகள் செய்து, குருதட்சணை வழங்கி, அவரிடம் பரிபூரண ஆசி பெற்று அரண்மனை புறப்பட தயாரானார். சுவாமியே சரணம் ஐயப்பா...

-யூகிதன்

அருள் ராஜயோகம்

மலர்-12 இதழ்-5 நவம்பர் 2025

வெளியிடுபவர் / ஆசிரியர்

SRJ "ராஜயோகம்"

Dr. K. RAMAAYYAPPAN Ph.D., (USA)

அருள் ராஜயோகம்

ஆன்மிக, ஜோதிட, மருத்துவ மாத இதழ்



புது எண் 139, பழைய எண் 7,
பன்னா பிளாசா, ஆற்காடு ரோடு,
கோடம்பாக்கம், சென்னை – 24.

தொலைபேசி எண் ; 044-24849187

அலைபேசி எண்கள் ;

**99404 31377 / 96772 76129**
**99529 91118 / 98401 60068**

e-mail : **arulrajayogam@gmail.com**
website : **www.arulrajayogam.com**



ஜோதிடம், ஆன்மீகம், மருத்துவம் சம்பந்தமான தங்களின் படைப்புகளையும், புகைப்படங்களையும் அனுப்பி வைக்கவும். ஆசிரியர் குழுவின் பரீசீலனைக்குப் பிறகு பிரசுரிக்கப்படும்.

**ஆயுள் சந்தா ரூ. 5000/-**




# வழிகாட்டிய ஐயப்பன் வாள்

ஒருமுறை அச்சன்கோவில் அழகனை காண்பதற்காக தள்ளாத வயதுடைய பக்தர் ஒருவர் தனியா வந்துக்கிட்டிருந்தார். அடர்ந்த காடு, இரவு நேரம், வழியும் சரியா தெரியலை. பக்தரின் மனதில் அச்சம் புகுந்தது. அச்சன்கோவில் அரசனுக்கு, அந்த வயதானவரின் அச்சம் புலப்பட்டுவிட்டது. இதற்கிடையே அந்த வயதானவரும் ஐயப்பனை நினைத்து, தன் பயத்தை போக்கும்படி வேண்டிக்கொண்டார். அப்போது வானில் ஒரு அசரீரி கேட்டது. 'அன்பனே! இப்போது இவ்விடத்தில் வாள் ஒன்று தோன்றும். அந்த வாள் உனக்கு வழிக்காட்டும். அச்சன்கோவில் அடைந்ததும் அந்த வாளை எனது சன்னிதியில் கொடுத்துவிடு.

அதுவரை யாரிடமும் எதுவும் பேசக்கூடாது' என்றது அந்த அசரீரி. அதன்படியே அங்கு, தோன்றிய வாள் பவுர்ணமியை காட்டிலும் அதிக ஒளி காட்டியது. அந்த ஒளியின் மூலமாக காட்டுப்பாதையில் அந்த நள்ளிரவில் நடந்து வந்து கோவிலை அடைந்தார் முதியவர். மறுநாள் விடிந்ததும், அந்த வாளை கோவிலில் ஒப்படைத்துவிட்டு, அங்கிருந்தவர்களிடம் நடந்தவற்றை விளக்கி கூறினார். அப்போது கருவறையிலிருந்து மீண்டும் அசரீரி ஒலித்தது. 'அன்பர்களே! அந்த வாளை எனது கருவறையில் வைத்து பூஜை செய்யுங்கள். என்றும் உங்களுக்கு அரணாக இருந்து காப்பேன்' என்றது. அதன்படி அந்த வாள் மூலவர் சன்னிதியில் வைக்கப்பட்டது. தற்போது அச்சன்கோவில் அழகனின் திருவாபரணங்கள் வைக்கப்பட்டுள்ள புனலூர் கருவூலத்தில் அந்த வாள் வைக்கப்பட்டுள்ளது.


Owned & Published by **K.RAMAAYYAPPAN** Published from N.No 139, O.No. 7, Panna Plaza, Arcot Road, Kodambakkam, Chennai - 600 024 and Printed by Mrs. **R.RADHA,** at **APSARA ART PRINTERS**, 18 (N.No. 67), P.V.Koil I Street, Pudupet, Royapettah, Chennai - 600 014. Editor : **K.RAMAAYYAPPAN.**

# அற்புத ஆற்றல்களை அள்ளித்தரும் அருட்பெரும் நூல்கள்

## ஜோதிடர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்!
## சூட்சுமத்தை உணர்த்திடும் அருட்பிரசாதம்!!

AP 001




ரூ.350/-

AP 002




ரூ.350/-

AP 003




ரூ.250/-

AP 004




ரூ.300/-

8 நூல்களும் இணைந்த (COMBO OFFER)

முந்துங்கள்! இச்சலுகை குறிப்பிட்ட காலம் வரை

~~ரூ. 3400/-~~

ரூ. 3100/-

AP 005




ரூ.550/-

AP 006




ரூ.425/-

AP 007




ரூ.425/-

மேலும் தனி புத்தகம் வேண்டுவோர் அந்தந்த புத்தகத்திற்குரிய தொகையை கிழ்கண்ட எமது வங்கி கணக்கில் பணம் செலுத்திவிட்டு தொடர்புக்கொள்ளவும் புத்தகம் உங்களுக்கு பதிவுத் தபால் (Regd. Parcel) மூலம் அனுப்பி வைக்கப்படும். கொரியர் மூலம் அனுப்ப இயலாது

செல்: 72999 21880 / 88386 38900

பணம் அனுப்ப வேண்டிய Bank Details

1. C. Raju & R. Radha,
   Post Office Savings Bank
   A/C No. 3610336507 (Chennai-14)
2. C. Raju & R. Radha,
   Karur Vysya Bank
   (Whites Road, Chennai-14)
   A/C No. 1219172000006855,
   IFSC - KVBL0001219
3. C. Raju & R. Radha,
   Tamilnad Mercantile Bank
   (Chennai TTK Road-Royapettah)
   A/C No. 123100050303219,
   IFSC - TMBL0000123
4. Apsara Publications,
   IDBI Bank
   (Chennai-Gopalapuram)
   A/C No. 1654102000000143,
   IFSC - IBKL0001654
5. C. Raju, Indian Bank
   (Chennai-Royapettah)
   A/C No. 426677897,
   IFSC - IDIB000R021




AP 008 ரூ.750/-

**ARUL RAJAYOGAM** TAMIL MONTHLY Registrar of Newspaper for India No. TNTAM/2014/57494 Registered: TN/CC(S) DN 521/24-26. Posted at Patrika Channel Egmore RMS. Date of Publication: 1st week of every month. DATE OF POSTING: October 21-27


"திக்கற்ற யாவரும்" "ஒப்பற்ற பயன்பெற"



"27 நட்ஷத்திரங்களை"
உள்ளடக்கிய "12 ராசிகளுக்கான"
தினப்பலன்கள்
அனைவருக்குமே அனுதினமும் "ராஜயோகம்" தரக்கூடிய
"ஆன்மீக அதிர்ஷ்ட மந்திரம்"
மற்றும் "ஆன்மீக தகவல்கள்"
தெரிந்துகொள்ள:

YouTube

R ராஜயோகம் டிவி

ஆழமான "ஆன்மீகத்தையும்" அறிய வேண்டிய "சாஸ்திரத்தையும்"
அற்புதமான "மனோ திடத்தையும்" அனுதினமும் வாரி வழங்கும்.

SRJ "ராஜயோகம்" Lion Dr.K.Ram Ph.D (USA)

S R J GEMS™ JEWELLERS

எங்கேயும் எப்போதும் SUCCESS

Singapore Malayasia Srilanka Australia London